தமிழின

# விடுதலை

இதழ்-20-ஆவணிமாதம் ( 15.08.1984) மாதம் இருமுறை -பக்கங்கள் 8

## எமது எண்ணம்

### ஈழத்தமிழர்கள் வடிக்கும் இரத்தக் கண்ணீர்

ஈழத்தமிழ் தமிழ் இனத்திற்கு ஒரு சோதனையான காலகட்டம் இது. விடுதலைப் போராட்டம் என்றால் இப்படி எல்லாம் நிகழும் என்று கனவில்கூட கருதாத பலர் இன்று இச் சூழ்நிலையை அனுசரித்து வாழத்தெரியாமல் திண்டாடுகின்றனர். அரசினால் நெருக்கடி ஒருபுறம். அதன் பாதுகாப்புப் படைகளினால் ஏற்படும் அச்சுறுத்தல்கள் மறுபுறமாக தமிழ ரின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கிக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் விடுதலை ப்போராட்டம் பற்றிய சரியான விளக்கத்தை மக்களுக்கு அரசியல் வாதிகளோ அல்லது இன்று முன்னணியில் நிற்கும் இயக்கங்களோ எடுத்து விளக்கவில்லை என்பதாகும்.

இனத்தின் நெருக்கடியான இவ்வேளையில் தீவிரவாத இயக்கங்கள் இன்னமும் ஒன்றை ஒன்று விமர்சித்துக்கொண்டு கழுத்தறுப்பு வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டும் போராளிகளை ச்சுட்டுக்கொண்டும் இருந்தால் இதன் முடிவுதான் என்ன? இதுதான் சாதாரண பொது மக்களின் கேள்வியாகும். இன்னமும் தீவிரவாத இயக்கங்கள் பல சோசலிசம் மாக்சியம், ஜனநாயகம், புரட்சி என்று பேசிக்கொண்டு திரிகிறார்கள். இவை கேட்பதற்கு அழகாகத் தான் இருக்கும். ஆனால் நடைமுறையில் என்ன நடக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க் கவேண்டும். மக்கள் இந்த சித்தாந்தத்தைப்பற்றி எல்லாம் அதிகம் இன்று அக்கறைப்பட வில்லை, அல்லது தலைமை எது என்பது பற்றியும் அவர்கள் கவலைப்படவில்லை. மக்களு க்கு வேண்டியதெல்லாம் தீவிரவாத இயக்கங்கள் எல்லாம் ஒன்று பட்டு எமது விடுதலைக்கு ப்போராடவேண்டும் என்பதுதான்.

இன்று பல தீவிரவாத இயக்கங்கள் தோன்றியுள்ளன. ஏதாவது ஒரு இயக்கம் ஏனைய இயக்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டுமென்ற முறையில் அதற்குரிய நடவடிக் கைகளில் இறங்கியுள்ளதா? வெறுமனே பத்திரிகைகளில் மட்டுமே ஒற்றுமை வேண்டும் என பெரிதாக அறிக்கைவிடுகின்றன. ஒரு இயக்கமானது ஏனைய இயக்கத்தில் உள்ள போராளி களை மதிக்க வேண்டும். சில இயக்கங்கள் விடுதலைக்காக தீவிரமாகச் செயற்பட்டிருக்க லாம். சில, போதிய நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருந்திருக்கலாம். அது அவ் இயக் கங்களின் பலத்தையும், போராட்டத்திட்டங்களையும் பொறுத்ததே. இன்று இயக்கங்கள் யாவும் ஒன்றுபட்டிருந்தால் எமது விடுதலைப்போராட்டம் முடிவுபெற்று இன்று நாம் சுதந்திரத் தமிழீழத்தில் வாழ்ந்து கொண்டிருப்போம். ஆனால் இன்று நாம் நெருக்கடியில் தொடர்ந்தும் வாழ்ந்து கொண்டிருப்பதற்கு எமது இயக்கங்களின் ஒற்றுமையின்மையே காரண மாகும். அதுமட்டுமல்ல எமது விடுதலைப்போராட்டத்திற்கு உதவக்கூடிய அயல் நாடு ஒன்று எமக்கு உடனடியாக உதவத்தயங்குவதற்கும் தமிழினத்தில் இன்னமும் ஆயிரக்கணக்கான போராளிகள் விடுதலைப்போராட்டத்தில் இருந்து சலிப்படைந்து ஒதுங்குவதற்கும் இந்த ஒற்றுமையின்மையே காரணமாகும்.

இன்று ஸ்ரீலங்கா ஆயுதப்படைகள் தமிழீழத்தில் இத்தனை அட்டூழியங்களையும் செய்து வரும் இவ்வேளையில் நாம் குழுக்களாகப்பிரிந்திருந்தால் அவர்களை வெற்றி கொள்ள முடியுமா? அல்லது எமது நோக்கத்தை வென்றெடுக்கத்தான் முடியுமா? இயக்கங்கள் இது பற்றிச் சிந்திக்கவில்லையா? அல்லது சிந்தித்தாலும் ஒற்றுமைக்கு வர வேறு ஏதாவது தனிப்பட்ட காரணங்கள் தடையாக உள்ளதா? தீவிரவாத இயக்கங்களில் சேர்ந்த இளைஞர்கள் விடுதலைப்போராட்டத்திற்கென தம்மையர்ப்பணிக்கத்தான் இவ் இயக்கங்களில் சேர்ந்தார்களே ஒழிய அவற்றின் தலைமைகள் மோதுவதைப்போல இத் தலைமைகளின் கீழ் மட்டத்தில் உள்ள இளைஞர்களிடம் மோதல் ஏதும் கிடையாது. இன்றும் பல இளைஞ ர்கள் தமது தலைமைகளைத் தூக்கி எறிந்துவிட்டு ஒன்றாகப்போராட்டக்களத்தில் குதிக்க ச்சித்தமாகவுள்ளனர்.

நாம் நடத்திக்கொண்டிருப்பது எமது நாட்டின் விடுதலைப்போராட்டமாகும். இப்போராட்டத்தில் தமிழீழத்தில் உள்ள ஒவ்வொரு பிரஜையின் பங்கும் இருக்க வேண்டும். அவர்கள் எந்த மதமோ, எந்தசமூகமோ, எந்த ஊரோ, எந்த இயக்கமோ என்பது பற்றி நாம் அக்கறை கொள்ளத்தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து இயக்கங்களும் ஒருங்கிணைந்து தமக்குள் ஒரு கூட்டுத்தலைமையை உருவாக்கி இதன் கீழ் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து அக்குழுக்கள் தத்தமக்குரிய கடமையைச் செய்யலாம். இதற்கான மாதிரித் திட்டமொன்றை நாம் கீழே சமர்ப்பிக்கின்றோம்.

சகல இயக்கங்களும் அதன்பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றை உருவாக்கி இக்குழு கீழ் வரும் பிரிவுகள் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கலாம்.

1. ராணுவ நடவடிக்கைக்கான பிரிவு.
2. மக்கள் தொடர்பு, அரசியல் நடவடிக்கைகளுக்கான பிரிவு.
3. வெளிநாட்டுத் தொடர்புகளுக்கான பிரிவு.
4. நிதி சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பிரிவு.
5. எல்லாத்துறைகளிலும் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் அடங்கிய பிரிவு.
6. அத்தியாவசிய சேவைக்கான பிரிவு.

இவற்றைவிட வேறு முக்கியமான பிரிவுகளையும் நிறுவி இப்பிரிவுகளில் ஒவ்வொரு இயக்கத்திலும் இருந்து அப்பிரிவுகளுக்கேற்ப திறமைசாலிகளைக் கொண்டு அப்பிரிவுகள் மேற்கூறிய கூட்டுத் தலைமையின்கீழ் செயற்படலாம். இவ்வாறு ஒவ்வொரு பிரிவும் வெவ்வேறு கடமைகளைச் செய்து வருகையில் ஒருபிரிவில் மற்றொருபிரிவு தங்கியிருப்பதால் இப்பிரிவுகளில்கூட மோதல் ஏற்பட முடியாது. மாறாக இத்தனை பிரிவுகள் செய்யும் வேலைகளை இன்று செய்து கொண்டிருப்பதைப் போல ஒவ்வொரு இயக்கமும் தனித்தனியே செய்வதால் இயக்கங்களில் பணம், காலம், சக்தி என்பன விரயமாவதுடன் குறிப்பிட்டதுறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களின் திறமைகளும் வீணடிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இவ்வாறு இணைந்து செயற்பட இயக்கங்கள் விரும்பாவிட்டால் ஒவ்வொரு இயக்கமும் ராணுவ அமைப்பில் உள்ளதுபோல "றெஜிமென்ற்" என அழைக்கப்படும் பிரிவுகளாக ஒரு கூட்டுத்தலைமையில் தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

தீவிரவாத இயக்கங்கள் மக்களின் உள்ளக்குமுறல்களைப் புரிந்து கொண்டு தனிப்பட்ட தமது பிரச்சினைகளை ஒதுக்கிவைத்துவிட்டு ஒற்றுமையாகச் செயற்பட முன்வர வேண்டும். ஸ்ரீலங்கா ஆயுதப்படைகளின் அட்டூழியங்களால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட மனவேதனையைவிட இளைஞர்கள் இவ்வளவும் நடந்த பின்பும் தமக்குள் மோதுகின்றார்களே என்பதால் ஏற்பட்ட வேதனையே இன்று எம் மக்களுக்கு அதிகமாகவுள்ளது. இந்த துர்ப்பாக்கிய நிலையை நினைத்து உண்மையாக விடுதலையை விரும்பும் மக்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கிறார்கள். மக்களின் கண்ணீரைத் துடைக்க தீவிரவாத இயக்கங்கள் முன்வருமா? அல்லது முன்னரைப்போல தமக்குள் முட்டி மோதுவார்களா? அல்லது தந்தை செல்வா கூறியதைப்போல " ஆண்டவன்தான் எம் இனத்தைக் காப்பாற்ற வேண்டும் " என நினைத்துக் கலங்குவதா?

----- ஆசிரியர்.

<u>வரலாறு என்னை விடுதலை செய்யும். - பிடல் காஸ்ட்ரோ நீதிமன்ற உரை</u>

மனச்சாட்சிகளை விலைபேசுவதற்காக அரசியல்வாதிகள் பல லட்சங்களைச் செலவு செய்தபோது தங்கள்நாட்டின்பெருமையைக் காப்பாற்ற விரும்பிய ஒரு சில இளைஞர்களோ நிதி வசதி இல்லாததால் மரணத்தைச் சந்திக்க நேரிட்டுள்ளது. இந்த நாடு இறுதிவரையிலும் பெருந்தன்மையான உறுதியான மனிதர்களால் ஆளப்படவில்லை. மாறாக நமது பொது வாழ்க்கையின் கசடுகளான அரசியல் வியாபாரிகளால் ஆளப்படுகிறதென்பதைத்தான் இது சுட்டிக்காட்டுகிறது.

எங்களது நோக்கங்களின்படி நேற்றைய் அல்லது இன்றைய் அரசியல் வாதிகள் ஒருவரிடமும் ஒரு சல்லிக்காசுகூட நாம் கேட்டதில்லை என்பதை நான் மிகுந்த பெருமையுடன் உங்களிடம் கூறிக்கொள்ளுகின்றேன். எங்களது தேவைகள் ஒப்பற்ற தியாகங்களால்தான் இணைந்தது. உதாரணமாக இந்த நோக்கத்திற்காக எனது ஒரு நண்பன் 300 பெசோக்களை எடுத்துக் கொண்டு என்னிடம் வந்தான். மற்றொருவன் தனக்கு வாழ்வளிக்கும் புகைப்படக்கருவியை விற்றான். இன்னொருவனோ தனது பலமாதச் சம்பளத்தையும் இதற்காகக் கொடுத்தான். தனது வீட்டில் இருந்த நாற்காலிகளையும் அவன் விற்க முனைந்தபோது நாம் அவனைத்தடுத்துவிட்டோம். மற்றொரு நண்பனோ தனது மருந்துக்கூடத்தை விற்றான். வேறொருவன் தனது ஐந்து ஆண்டு சேமித்த பணத்தை எமக்குத் தந்தான். இதேபோன்றுதான் எமது குழுவில் இருந்த பலரும் தமது சிறு பொருட்களைக்கூட எமது இப்பெருநோக்கத்திற்காகக் கொடுத்தார்கள். இத்தகைய செயலைச் செய்ய ஒருவருக்கு தனது நாட்டின் மீது மகத்தான பற்று இருக்கவேண்டும். கொள்கையின் பிடிப்பால் செய்த இந்த நடவடிக்கைகளின் நினைவு என்னைக் கடந்த காலத்திற்கு இட்டுச் செல்கிறது. எந்த ஒரு நாட்டின் விடுதலைக்குப்போராடுபவர்களும் இதனைத்தான் செய்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகம் கொந்தளிக்கிறது

தமிழீழத்தில் நடைபெறும் ஸ்ரீலங்கா அரசின் இனப்படுகொலையைக் கண்டித்து தமிழகத்தில் பல்வேறு கட்சிகளும் மாணவர் அமைப்புக்களும் கிளர்ச்சி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. லோக் சபாவில் எதிர்கட்சிகள் யாவும் ஈழத்தமிழரைக் காப்பாற்ற இந்திரா உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளது. தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் கலைஞர் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளது. கல்லூரி மாணவர்களும் ஆர்ப்பாட்டங்கள் செய்த வண்ணம் உள்ளனர். இவர்களது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவே தமிழக அரசு ஒரு வார காலத்திற்கு கல்லூரிகளை மூடியுள்ளது. மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தின் விளைவாக சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகம் தாக்கப்பட்டது.

கத்தோலிக்க பாதிரியார் கைது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் வைத்து கத்தோலிக்க பாதிரியார் ஒருவர் ஆயுதப்படைகளால் கைதுசெய்யப்பட்டு விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டார். பாதிக்கப்படும் மக்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்காக குரல்கொடுப்பதும் உதவுவதும் கத்தோலிக்க அமைப்புக்களது இயல்பாகும். ஸ்ரீலங்கா அரசு என்ன காரணமோ தெரியாது தமிழ்ஈழத்தில் உள்ள கத்தோலிக்க குருமார் மீது விசேட கவனம் செலுத்துகிறது. அடிக்கடி அவர்களுக்குத் தொல்லை கொடுக்கிறது.

தமிழீழ ராணுவம் அரசுக்கு எச்சரிக்கை

தமிழீழத்தில் உள்ள ஸ்ரீலங்கா ராணுவத்தை மீளப்பெறாவிட்டால் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தைக் குண்டுவைத்துத் தகர்க்கப்போவதாக தமிழீழ ராணுவம் அரசுக்கு எச்சரித்துள்ளது.. இதற்காக ஒரு வாரம் காலக்கெடு கொடுத்துள்ளது. இச் செய்தியின்பின் கொழும்பிலும் பல தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுகிறார்கள். கோட்டை ரயில் நிலையத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

தீவிரவாத நடவடிக்கைகள்.

பொலிகண்டியில் கடற்படைமீதான தாக்குதல் வல்வெட்டித்துறையில் ராணுவத்தின் மீதான தாக்குதல், பொலிஸ்நிலைய தாக்குதல், பருத்தித்துறை, சுன்னாகம், ஒட்டிசுட்டான் ஆகிய பொலிஸ் நிலையங்கள் மீதான தாக்குதல் மன்னார்-பூநகரி ரோட்டில் ராணுவத் தாக்குதல் யாழ் வைத்திய சாலை அருகில் ராணுவத்தின் மீது தாக்குதல் அரசுடமையான கிரான்லிரோட் மக்கள் வங்கி, வைத்தியசாலை வீதி இலங்கை வங்கி, பிரதான வீதி மக்கள் வங்கி, பிரதான வீதி தேசியசேமிப்பு வங்கி, போன்ற யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கிகளை சேதப்படுத்தியமை, வவுனியா எஸ்.பி கேரத்தின் மீது வெடிகுண்டு வைத்து தாக்கியமை இவையாவும் தீவிரவாத இயக்கங்களால் அண்மையில் நடாத்தப்பட்ட நடவடிக்கைகளாகும். இவற்றில் சில நடவடிக்கைகளுக்கு விடுதலைப்புலிகள் உரிமைகோரியுள்ளது. இந் நடவடிக்கைகள் காரணமாக வடபகுதிகளில் அரசுசெயலகங்கள் ஏதும் இயங்கவில்லை என்பதுடன் அரசின் செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்து விட்டது. அரசுக்கு இதன்காரணமாக பெருமளவு நஉஷ்டம் ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலி ஒன்றின் வீரசகாசம்.

விஜி என்பது அந்த வீரவேங்கையின் பெயர். இடுப்பில் துப்பாக்கியுடன் அவன் சென்று கொண்டிருக்கும்போது இராணுவத்தால் மறிக்கப்பட்டான் தனது பையிலுள்ள அடையாள அட்டையை எடுத்துக்கொடுத்த அதே வேளையில் துப்பாக்கியை எடுத்து அந்த இராணுவவீரனைச் சுட்டுவிட்டு அவனிடமிருந்த றைபிளை பறித்துக் கொண்டு ஓடிவிட்டான். அந்த வேங்கை. ஆயிரத்தில் ஒருவன் அவன.

அகதிகளுக்கு உதவி

அண்மையில் ராணுவத்தினாலும் கடற்படையினாலும் ஏற்பட்ட அட்டூழியங்கள் காரணமாக வடமராட்சியின் பல்வேறு இடங்களிலும் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் எம்மக்களுக்கு உதவுவது எமது கடமையாகும். எனவே சமூகஸ்தாபனங்கள் பொது மக்கள் தம்மால் முடிந்த உதவியை இம் முகாம்களூடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்யும்படி வேண்டுகிறோம்.

நெல்லியடியிலும் பருத்தித்துறையிலும் ராணுவ அட்டகாசம்.

கடந்தவாரம் நெல்லியடியில் உள்ள ஐந்து கடைகளில் அரிசி, பால்மா, பருப்பு, பிடவை, பாதணிபோன்ற பொருட்களை பாதுகாப்புப்படையினர் எடுத்துச் சென்றனர். அத்துடன் அங்கு நின்ற வான்ஒன்றின் முன்பக்க கண்ணாடியையும் அடித்துநொருக்கி விட்டு அங்குநின்ற பொதுமக்களையும் தாக்கிவிட்டுச் சென்றனர்.

இதேபோன்று பருத்தித்துறையிலும் குமாரச்சகத்தையும் பிறேமா அச்சகத்தையும் வேறு பலகடைகளையும் பாதுகாப்புப் படைகள் சேதப்படுத்தியுள்ளன. அத்துடன் இங்கு சுமார் 100 இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகத்தில் நடைபெற்ற சம்பவம்

---

11ம் திகதி சனிக்கிழமை இராணுவத்தினர் காலை 6மணியிலிருந்து சுன்னாகம் மருதனார்மடம் சந்திகளில் வீதித் தடைகளைப் போட்டு எவ்வித வாகனமும் செல்லவிடாது தடுத்துக்கொண்டிருந்தனர். இவ்வேளையில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திலிருந்த ஆயுதங்கள் தளபாடங்கள் யாவும் அப்புறப்படுத்தப்பட்டன. இவ்வேலை பி.பகல் 2மணியளவில் முடிவுற்றது. பின்னர் 3மணிவரையும் இராணுவத்தின் பொறுப்பில் பொலீஸ் நிலையக் கட்டிடம் இருந்தது. இவ்வேளையில் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டு வாய்க்குள் துணி அடைக்கப்பட்ட நிலையில் சுமார் 10இளைஞர்கள் கட்டிடத்துள் வைத்துப் பூட்டப்பட்டனர். இதன் பின் இரண்டு பயங்கர வெடிகுண்டுகளை அங்கு இராணுவம் வைத்துவிட்டுச் சென்றுவிட்டது. இதை அறிந்த இளைஞர்களும் பொதுமக்களும் கட்டிடத்தின் கதவை திறக்க முயற்சித்த போது அங்கு இராணுவத்தால் வைக்கப்பட்ட குண்டு வெடித்தது சுமார் இருபதுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இக்குண்டுகள் இரண்டும் அதிக சக்தி வாய்ந்தவை என்பதும், வெளிநாட்டில் செய்யப்பட்டவை என்பதும் எமது அபிப்பிராயமாகும். இக் குண்டு வெடிப்பின் காரணமாக சுவருக்குள் வைக்கப்பட்டிருந்த இரும்பு வளை வளைந்துள்ளது. இதிலிருந்தே இக்குண்டின் சக்தி தெரிகிறது. இக் குண்டு இஸ்ரேலிய மொசாட் படையின் தயாரிப்பாகும்.

குண்டு வெடித்த மறுநாட்காலை 6மணியளவில் பொலிஸ் நிலையத்தின் இருபக்கத்திலும் தடைகளைப் போட்டு பல தீவிரவாத இயக்கங்கள் ஒருமித்த நிலையில் இராணுவத்தை வரவிடாது தடை செய்துகொண்டிருக்கும்போது வேறு பலர் கட்டிடத்தின் இடிபாடுகளுக்கிடையிலிருந்த சடலங்களை மீட்டுக் கொண்டிருந்தனர். இத்தகவலை அறிந்து யாழ்ப்பாணத்திலிருந்து வந்த இராணுவத்தினர் தடைகளை மீறிச் செல்ல முடியாமல் அவ்விடத்தில் நின்ற பொதுமக்களைத் தாக்கிவிட்டு டாக்சி ஒன்றையும் எரித்தனர். இதே போல காங்கேசன்துறையிலிருந்து வந்த இராணுவத்தினரும் மறுபக்கத்திலிருந்த தடையை மீறிச் செல்ல முடியாமல் திரும்பிச் சென்றனர். இவ்வாறு செல்லும்போது வீதியில் நின்றவர்களை துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு சென்றனர். இச் சம்பவத்தில் சுமார் 25பேர் வரை துப்பாக்கி சூட்டுக் காயங்களுக்குள்ளாகினர். தடைகள் யாவும் அகற்றப்பட்ட பின் சுன்னாகத்திற்கு வந்த இராணுவம் அங்கு நின்ற 63 வயது நிரம்பிய கூலித் தொழிலாளி ஒருவரைச் சுட்டுக் கொன்று [illegible] ஆடுகால் ஒன்றில் தூக்கி கட்டிவிட்டுச் சென்றது. இதே தினம் யாழ் வளாகத்தின் முன்னால் ஒருவர் சுடப்பட்டு மரணமானார்.

அரசாங்க அதிபருக்கு இராணுவம் தடை

---

அண்மையில் வல்வெட்டித்துறையில் இராணுவத்தால் எரிக்கப்பட்ட இடங்களை பார்வையிட வருகை தந்த யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.பஞ்சலிங்கம் அவர்களை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்லவிடாது இராணுவத்தினர் தடுத்து நிறுத்தினர். அரசாங்க அதிபர் வந்த வழியே திரும்பிச் சென்றார்.

மாதகலில் துப்பாக்கிச் சூடு

---

மாதகல் பகுதிகளில் கடந்தவாரம் கடற்படையினர் பல வீடுகளுக்கு தீ வைத்தனர். இதன் காரணமாகப் பல வீடுகள் சேதமுற்றன. சிலர் துப்பாக்கி சூட்டினால் காயமுற்றனர்

மன்னார்- வவுனியா றோட்டில் தமிழர் சடலங்கள்.

---

மன்னார் வவுனியா றோட்டில் இருபதுக்கு மேற்பட்ட தமிழர்களின் சடலங்கள் 8.8.84 புதன்கிழமை காலை காணப்பட்டது. இச் சடலங்கள் தமக்குள் மோதிக்கொண்ட பயங்கரவாதிகளது, என்று ஸ்ரீலங்கா வானொலி அறிவித்தது. இதில் பயங்கரவாதி என அழைக்கப்படுகின்ற விடுதலைப் போராளி எவரது சடலமும் இல்லை. கொல்லப்பட்ட யாவரும் சாதாரண பொதுமக்களாகும். இதற்கு உதாரணமாக இராணுவத்தால் கொல்லப்பட்ட ஒருவரது விபரத்தை கீழே தருகிறோம். "அல்வாய் மேற்கு அல்வாய் என்ற முகவரியைச் சேர்ந்த 38வயதுடைய செல்லமாணிக்கம் தேவசிகாமணி என்பவர் 29.7.84 அன்று பாலக்குளத்தில் கட்டுமரம் வெட்டும் வேலைக்காக சென்றார். இவரும் வேறு மூவரும் 7.8.84 செவ்வாயன்று மாலை, வேலை முடிந்து குளிக்கச் செல்லும்போது இராணுவத்தால் கைது செய்யப்பட்டு மறுநாள் இவர்களது சடலங்கள் றோட்டில் சூட்டுக்காயங்களுடன் கிடக்கக் காணப்பட்டது. இவரது சடலமும் உறவினருக்கு கையளிக்கப்படவில்லை. ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவரை இழந்து குடும்பம் [illegible] தவிக்கிறது. இவர்களைபோலவே இராணுவத்தால் கொல்லப்பட்ட அத்தனை பேரும் அப்பாவிப் பொதுமக்களேயாகும். இவ்வாறு கொல்லப்பட்ட மற்றும் மூவர் காட்டு இலாகாவைச் சேர்ந்த நாற்றுமேடையில் வேலை செய்யும் ஏழைத் தொழிலாளிகளென அறிகிறோம்.

வல்வெட்டித்துறையில் தொடர்ந்தும் கடற்படையினர் வேட்டை.

---

வல்வெட்டித்துறை, பொலிகண்டி, தொண்டமனாறு கடற்பகுதிகளில் கடந்த வாரம் இரவு அடிக்கடி கடற்படையினர் கடலிலிருந்து அவர்களது கப்பலில் பொருத்தப்பட்டுள்ள பீரங்கிகள் மூலம் வெடிகுண்டுகளைத் தீர்த்தவண்ணம் உள்ளனர். இதன் மூலம் பொலிகண்டிப்பகுதியில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. கெருடாவில் என்ற ஊரில் உள்ள பெண்மணி ஒருவரும் காயமுற்றார். இப்பீரங்கி வெடிகள் மூலம் கடற்தொழிலாளர்களை கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவிடாது கடற்படை தடுத்துள்ளது. அத்துடன் இப்பகுதிகளில் வாழும் சுமார் 50000 மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

தமிழீழ மக்களைக் கொன்றொழிக்கும் நோக்குடன் [illegible] வாங்கிய ஆயுதங்களை தென் ஆபிரிக்க விமானம் ஒன்றின் மூலம் இலங்கைத் தீவுக்கு கொண்டுவந்ததையும் கடந்த இதழில் லலித் அத்துலத் முதலி சுவிற்சலாந்திற்கு ஆயுதக் கொள்வனவுக்காக சென்றதை வெளியிட்டிருந்தோம். இவர் சுவிற்சலாந்துக்கு சென்றதைப் பற்றி இலங்கைப் பத்திரிகைகள் செய்திகள் எதனையும் வெளியிடவில்லை. தாம் இங்கிலாந்துக்கே சென்றதாக லலித்தும் தெரிவித்துள்ளார். ஆனால் 10.8.84 ஐலண்ட் ஆங்கிலப் பத்திரிகையில் வந்த முன்பக்கச் செய்தி ஒன்றில் சுவிற்சலாந்திற்கு அத்துலத் முதலி அவர்கள் விஜயம் செய்தது குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே அமைச்சரின் சுவிற்சலாந்து விஜயம் இச்செய்தி மூலம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது.

## சென்னை மீனம்பாக்கப் குண்டு வெடிப்பு.

2.8.84 அன்று சென்னை மீனம்பாக்கம் விமானநிலைய குண்டு வெடிப்புச் சம்பவம்பற்றி பலரும் பல்வேறு விதமாக கருத்துக்களை வெளியிடும் இவ்வேளையில் எமக்கும் கிடைத்த தகவல்களை வெளியிடுவது இவ்வேளையில் முக்கியமாகும்.

குண்டுவெடிப்பின் பின்னர் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் தப்பிவிட்டார் என்ற செய்தி வெளிவந்ததல்லவா? தப்பி ஓடியவர் எக்கநாயக்கா என்ற சிங்களவர் என ஊர்ஜிதமற்ற செய்தி ஒன்று தெரிவிக்கிறது. இது உண்மையானால் இச்சிங்களவர் ஏன் சென்னைக்குச் சென்றார். அதன் பின் காயமுற்ற இவர் ஏன் தலைமறைவானார்? இதனை ஆராயும் போது சிங்களத் தீவிரவாதிகளோ, ஸ்ரீலங்கா அரசோ இதில் சம்பந்தப்பட்டிருக்கலாமென சந்தேகிக்க இடமுண்டு. தமிழகத்தில் உள்ள தமிழீழத் தீவிரவாதிகளை இக்குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் இணைப்பதற்காக இது மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். அல்லது [illegible] [illegible]0,000 ஈழத்தமிழருக்கெதிராக இந்திய அரசை செயற்படத் தூண்டும் நோக்குடன் இக்குண்டுவெடிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக தமிழீழத்திற்காகப் போராடும் தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிக்கும் தமிழக அரசிற்கும் இந்திய அரசிற்கும் சவாலாக இக்குண்டு இஸ்ரேலிய மொசாட் படையால் கூலிக்கமர்த்தப்பட்டவர்கள் மூலம் வெடிக்கப்பட்டிருக்கலாம். தமிழக முதல்வருக்கும் அமைச்சர்களுக்கும் இக்குண்டு வெடிப்பைத் தொடர்ந்து தொலைபேசி மூலம் கிடைத்த பயமுறுத்தல்கள் தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு இவர்கள் ஆதரவளிப்பதால் தான் என்றும் சிலர் கருதுகின்றார்கள்

எந்த ஒரு ஈழத் தமிழனும் இந்தியாவுக்கு எதிராக இக்குண்டை வெடிக்கவைக்க விரும்பமாட்டான். , என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஆகையால் இக் குண்டு வெடிப்பில் இலங்கை அரசு கூறுவதைப் போல் எந்த ஒரு ஈழத்தமிழனும் சம்பந்தப்பட்டிருக்கமாட்டான் என்றே நம்புகிறோம். இக்குண்டை தமிழீழத் தீவிரவாதிகள் வைத்திருந்தால் அது கொழும்பு செல்லும் விமானத்திற்காகவே வைக்கப்பட்டிருக்கும். அது அதிஷ்டவசமாக விமானத்தில் ஏற்றப்படாமல் இருந்திருக்கலாம். குண்டு வெடிப்பதற்கு சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு முன்பிருந்தே மூன்று தடவைகள் தொலைபேசி மூலம் குண்டை அகற்றுமாறு விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வந்த தகவலை நாம் கருத்தில் கொள்ளாதிருக்க முடியாது. அக் குண்டு சென்னையில் வெடிக்கக்கூடாது என்பதே தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தவர்களின் நோக்கமாகும். இன்னும் சில தினங்களில் இந்திய விசாரணை கமிசன் அறிக்கை வெளிவந்துவிடும். அதன் பின்பு உண்மை வெளிவரும் தானே.

## கைதடியில் நடைபெற்ற சம்பவம்.

13.8.84 திங்கட்கிழமை நண்பகல் 11.00 மணியளவில் கைதடிச் சந்தியில் தீவிரவாதிகளின் வான் ஒன்றுடன் ராணுவ ரக்வண்டி மோதியது. உடனே ராணுவம் சுடத்தொடங்கியது. வான்சாரதியான இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டார். ஏனைய இளைஞர்கள் தப்பி ஓடிவிட்டனர். அதன் பின் அங்குள்ள தென்மராட்சி ப.நோ.கூ.சங்க மக்கள் கடையின் முகாமையாளரான 38வயதுடைய வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம், விற்பனையாளரான 37 வயதுடைய கந்தசாமி சிதம்பரநாதன் என்பவரும் ஊழியர் சிதம்பரன் சூரியகுமார் என்பவரும் சாமான்கள் வாங்கிக்கொண்டிருந்த 42வயதான ஆறுமுகம் செல்வரத்தினராசா என்பவரும் பயத்தினால் கடையைப் பூட்டிக்கொண்டு உள்ளே நின்றபோது கடையை உடைத்து திறந்து இராணுவம் இவர்களை சுட்டுக் கொன்றது. இச்சம்பவத்தை வீதியருகே நின்று பார்த்துக்கொண்டிருந்த 12வயதுச் சிறுவன் கதிரவேலு குகனேந்திரன் என்பவரும் சுடப்பட்டு மரணமானார்.

ராணுவம் சூடுதொடங்கியதும் மக்கள் சிதறி ஓடி அங்குள்ள பிள்ளையார் கோயிலில் அடைக்கலம் புகுந்தனர். அங்கும் சென்ற ராணுவத்தினர் 25வயதான மார்க்கண்டு சின்னராசா என்பவரையும் 26வயதான கந்தையா பாலு என்பவரையும் அவர்களின் பெற்றோர் முன்னிலையில் துடிதுடிக்கச் சுட்டுக் கொன்றனர். இதே வேளையில் வேலையால் அவ்வழியே வந்துகொண்டிருந்த சுப்பிரமணியம் நவீனசபேசன் என்ற 19வயது இளைஞனும் சுட்டுக்கொல்லப்பட்டார். இதைவிட சுமார் 25பேர் வரை சூட்டுக்காயங்களுக்குள்ளாயினர். அச்சத்தினால் அப்பகுதி மக்கள் சுமார் 2000பேர்வரை இடம்பெயர்ந்துள்ளனர்.

சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் உடல்களை எடுக்கச் சென்ற உறவினர்களிடம் இவர்கள் பயங்கரவாதிகள் என எழுதிக் கையெழுத்துப்போட்டுவிட்டு உடல்களை எடுத்துச் செல்லுங்களென ஒரு இராணுவ அதிகாரி மிரட்டினாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் நகரில் நடைபெற்ற சம்பவம்

மன்னார் நகரம் இராணுவத்தினால் முற்றாக எரித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. இங்கு 106 கடைகள் எரிக்கப்பட்டதாக இந்திய வானொலிச் செய்தி கூறிய போதிலும் எரிக்கப்பட்ட கடைகள், கட்டிடங்கள் என்பவற்றின் எண்ணிக்கை இதைவிட அதிகமானவை இருக்குமென செய்திகள் கூறுகின்றன. அடம்பனில் சுமார் 10க்கு மேற்பட்ட கடைகளும், வீடுகளும், திருக்கேதீஸ்வரத்தில் சுமார் 5 கட்டிடங்களும் மற்றும் பல இடங்களும் இராணுவத்தால் தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன. இச்சம்பவங்களின் போது சுமார் 100 பேர் வரையில் கொல்லப்பட்டிருக்கலாமென அஞ்சுகிறோம். கடை உரிமையாளர் ஒருவர் உயிருடன் எரியும் நெருப்பில் போடப்பட்டார் எனவும் தெரியவந்துள்ளது.

இச்சம்பவங்களில் இராணுவத்தினர் சம்பந்தப்படவில்லையென சிறீலங்கா அரசு மறுப்பினும் பி.பி.சி. வெரித்தாஸ் வானொலிகள் இராணுவம் இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக பொதுமக்கள் கூறியதாக செய்தி வெளியிட்டன. இச்சம்பவங்களை நேரில் பார்த்த பொதுமக்கள் பலர் மன்னாருக்கு விஜயம் செய்த அமைச்சர் முகமதுவிடம் இராணுவமே இத்தீவைப்பில் ஈடுபட்டதாக தெரிவித்தனர். மன்னார் சம்பவத்தின் பின்னர் சிறீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாடற்ற வெறிச் செயல்கள் உலக அரங்கில் தெரியவந்ததால் சிறீலங்கா அரசு அதனை மூடி மறைக்கவே இராணுவத்தின் மீது தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் எரிந்து போன கடைகளை கட்டித்தருவதாகவும் கூறியுள்ளது. இதற்கு மற்றுமோர் காரணம் மன்னார் நகரில் வாழும் இஸ்லாமியத் தமிழரை பகைத்துக் கொள்ளக்கூடாது என்பதாலும் அரசு இம்முடிவு எடுத்துள்ளதென நாம் நம்புகிறோம்.

## பொலிகண்டி - வல்வெட்டித்துறை சம்பவம்

4.8.84 சனிக்கிழமை காலை 6.00 மணிமுதல் பொலிகண்டி கடற்கரையில் மக்கள் பீதிப்பகம். சந்தை என்பன அமைந்துள்ள இடத்தில் தினமும் மீனவர்களிடம் மீன்களை பறித்தெடுக்கும் கடற்படையினர் அன்றும் மூன்று வள்ளங்களில் வந்து மீனவர்களை அடித்துக் காயப்படுத்தி மீன்களைப் பறித்தபின் பயங்கரவாதிகள் இங்கு வந்தார்களா எனக் கேட்டு அவர்களைத் தாக்கிய பின் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான விசைப்படகினைக் கைப்பற்ற எத்தனித்தபோது அங்கு வந்த தமிழீழ விடுதலைப் புலிகளால் கடற்படையினர் சுடப்பட்டு மூன்று பேர் ஸ்தலத்தில் மரணமடைந்ததுடன் ஆறுபேர் படுகாயமடைந்தனர். இதன் பின்பு அன்று [illegible] மாலை 4 மணியளவில் [illegible] பொலிகண்டி, வல்வெட்டித்துறைப் பகுதிகளில் இராணுவத்தினர் ஒலிபெருக்கி மூலம் அடையாள அட்டைகளுடன் அவ்வூரில் உள்ள இளைஞர்களை கொண்டு வந்து தமக்கு அடையாளம் காட்டுமாறு பெற்றோர்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர். அப்பகுதிகளில் உள்ள சுமார் 500 இளைஞர்களை அழைத்துச் சென்ற பெற்றோரை திருப்பி அனுப்பிவிட்டு அவ் இளைஞர்களை பலாலி இராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்று அவர்களை அங்குள்ள பாடசாலை ஒன்றில் வைத்திருந்தனர். அதன் பின் அவர்களை கொழும்புக்கு கொண்டு சென்றுள்ளனர். [illegible] 12 சடலங்கள் இவர்கள் வைக்கப்பட்ட பாடசாலைக்குள் கிடந்ததாக அறிகிறோம். இதைத்தவிர ஆழியவளை முகாமிற்கு அண்மையிலுள்ள பற்றைகளில் சில இளைஞர்களின் சடலங்கள் உள்ளதாகவும் அறிகிறோம். எனவே அழைத்துச் செல்லப்பட்ட சில இளைஞர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டிருக்கலாமென அஞ்சுகிறோம். இதே போன்று பருத்தித்துறைப் பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

5.8.84 ஞாயிறு காலை 3 யுத்தக்கப்பல்களில் கரையை நோக்கி வந்து கடற்படையினர் கரை இறங்குவதற்கு பாதுகாப்புக் கொடுப்பதற்காக வந்த இராணுவத் தொடருக்கு சுமார் 10.00 மணியளவில் வல்வை மகளிர் கல்லூரி அருகில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் வெடிகுண்டு வைத்து தாக்கிய போது ஒரு ஜீப்வண்டி சுக்குநூறாகியதுடன் அதில் வந்த உதவிப் பொலிஸ் அதிபர் உட்பட 4 பாதுகாப்புப்படையினர் கொல்லப்பட்டனர். அத்துடன் 9பேர் படுகாயமுற்றனர். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் நூற்றுக்கணக்கான வீடுகளுக்கும் கடைகளுக்கும் மீனவர்களின் வலைகள், வள்ளங்கள், குடிசைகள், வாடிகள் என்பவற்றிற்கும் தீவைத்துக் கொளுத்தினர். அத்துடன் அன்று மாலை 5.00 மணியளவில் கடற்படையினர் கடலிலிருந்து பீரங்கி வெடிகளைத் தீர்த்தனர். இதன் மூலம் பல கட்டிடங்கள் சேதமுற்றன. இதன் பின் இரவில் அடிக்கடி கடற்படை இவ்வாறு பீரங்கி வெடிகளைத் தீர்த்தவண்ணம் உள்ளனர்.

14.8.84 செவ்வாயன்று வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தை விடுதலைப்புலிகள் தாக்கிய பின் மீண்டும் அதே கோவிலடிப்பகுதியில் சுமார் 50 மேற்பட்ட கடைகள், வீடுகள் என்பவற்றிற்கு சிறீலங்கா பாதுகாப்புப் படைகள் தீவைத்ததுடன் அஞ்சல் நிலைய அதிபர் ஒருவரையும் சுட்டுக் கொன்றனர்.

மொத்தமாக வல்வெட்டித்துறையில் கணக்கிடமுடியாத சேதங்கள் சொத்து இழப்புக்கள் என்பன ஏற்பட்டதுடன் பொலிகண்டிப் பகுதியில் நூற்றுக்கணக்கான மீனவ குடும்பங்கள் அகதிகளாக்கப்பட்டு கடற்றொழில் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

## ஒற்றுமையை விரும்பும் கூட்டணியின் வேற்றுமை.

அகிம்சை வழியில் சிறீலங்கா அரசுக்கு எதிராக போராட்டம் ஒன்றை நடத்த விரும்பும் கூட்டணியினர் இப்போராட்டத்திற்கு எல்லா தீவிரவாத அமைப்புக்களையும் ஆதரவை வேண்டி கூட்டம் ஒன்றை நடத்தப் போகிறது. கூட்டணியின் முக்கிய பிரமுகர் ஒருவர் "ஒரு பகுதி தமிழ் மக்கள் விடுதலைக் கூட்டணியை அழித்துவிட்டு" இக்கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் வராவிட்டால் நீங்களும் இதனைப் பகிஷ்கரிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். அமெரிக்க தமிழ் ஈழ மாநாட்டில் கலந்துகொண்ட பிரமுகர் ஒருவர் ஒற்றுமையை வலியுறுத்தினார். [illegible] புரியாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிக்கொடுத்தவன் சுட்டுக்கொல்லப்பட்டான்.

மீன்வாடியில் ... என்ற பட்டப்பெயரையுடைய வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நடனி என்பவரது முன்பு ராணுவத்தில் சமையல் வேலை செய்து ... [illegible] ... சுட்டுக்கொல்லப்பட்டான் இவன் ராணுவத்தாருக்கும் பொலிசாருக்கும் மீன் இறைச்சிபோன்றவற்றை வாங்கிக் கொடுக்கும் வேலைசெய்து வந்தான் என்றும் அதேவேளையில் பாதுகாப்புப் படைகளுக்கு தீவிரவாதிகளின் நடமாட்டம் பற்றி தகவல் கொடுத்தான் என்றும் அன்று 5.8.84 அன்று ராணுவமும் கடற்படையும் வல்வெட்டித்துறைப் பகுதியில் குறிப்பிட்ட பல படகுகளைச் சேதமாக்க இவனே காரணமாக அவற்றை அடையாளம் காட்டிக் கொடுத்தான் எனவும், இவனைத் தீவிரவாதிகள் பிடித்தபோது இவனிடம் வயலஸ் கருவி ஒன்று இருந்ததாகவும் அறிகிறோம். இவனை தீவிரவாதிகள் பருத்தித்துறையில் வைத்து சுட்டுக்கொன்று மரணதண்டனை நிறைவேற்றினார்கள்.

விடுதலைப் புலிகள் உரிமை கோருகின்றனர்.

04.08.1984 அன்று பொலிகண்டியில் நடைபெற்ற கடற்படையினர் மீதான தாக்குதல். 05.08.1984 இன்று வல்வெட்டித்துறையில் நடைபெற்ற ராணுவத்தாக்குதல் அதே தினம் யாழ் வைத்தியசாலை அருகில் ராணுவத் தாக்குதல், இதே தினம் ஒட்டிசுட்டான் பொலிஸ்நிலையத் தாக்குதல். ஆகியவற்றை தாமே நடாத்தியதாக விடுதலைப்புலிகள் பிரசுரம் ஒன்றின்மூலம் உரிமை கோரி உள்ளது.

சன்குறூப் பத்திரிகைகளில் தமது இயக்கத்துள் பிளவு எனவெளிவந்த செய்தியில் உண்மை ஏதும் இல்லை எனவும் அதில் குறிப்பிட்டதைப்போல குகன் யோகேந்திரன் மரணம் அடையவில்லை எனவும் பிரபாகரன், ராகவன் ஆகியோருக்கு காயம் ஏதும்ஏற்படவில்லை எனவும் இத்தகைய பிரச்சினையேதும் இயக்கத்துள் இல்லையெனவும் புலிகள் அப்பிரசுரத்தில் தெரிவித்துள்ளன.

வவுனியாவில் பொலிஸ் அதிபர் கொலை.

வவுனியா பொலிஸ் அதிபர் ஊறரத் தீவிரவாதிகளினால் இவரது அலுவலகத்தில் வைக்கப்பட்டவெடிகுண்டுவெடித்ததன் மூலம் கொல்லப்பட்டார். வவுனியாவில் மலையகத் தோட்டத்தொழிலாளர்களை குடியேற்றி அங்கு வாழும் மலையகத் தமிழ் மக்களுக்கு பெரும் சேவை புரிந்த காந்திய இயக்கத்தை அழித்ததிலும் அங்குள்ள தமிழ் தீவிரவாதிகளை கொன்று குவித்ததிலும் இப் பொலிஸ் அதிகாரி பெரும் பங்கு வகித்தான். தமிழ் ஈழத்தின் குரல் என அழைக்கப்படும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் வானொலி இப்பொலிஸ் அதிகாரிக்கு தமது இயக்கம் மரணதண்டனை விதித்து உள்ளதாகவும் அதுவிரைவில் நிறைவேற்றப்படும் என்றும் அறிவித்தது. ஆகையால் இக் கொலை தமிழீழ மக்கள்விடுதலைக்கழக போராளிகளாலே மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என நாம் கருதுகிறோம்.

வவுனியாவில் ஆயுதப்படைகள் வெறியாட்டம்.

வவுனியா சந்தியில் அமைந்துள்ள " வேல்கபே " என்ற தேனீர் கடையில் வேலை செய்யும் முகாமையாளரான தமிழர் ஒருவரையும், கடையில்கூலிவேலை செய்யும் சிங்களவர் ஒருவரையும் கடையில் வேலைசெய்யும் மற்றும் நான்கு மலையக தோட்டத்தொழிலாளர்களையும் ஸ்ரீலங்கா பாதுகாப்புப்படையினர் குண்டுவீசிக் கொன்றனர், அத்துடன் இக் கடையின் உரிமையாளரை அழைத்துச்சென்று வவுனியா பிள்ளையார் கோவிலடியில் உள்ள குளக்கட்டில் வைத்து பாதுகாப்புப் படையினர் சுட்டுக்கொன்றனர்.

கடலில் மீனவர் சுட்டுக்கொலை.

பொலிகண்டி ஆலடிஎன்ற இடத்தைச்சேர்ந்த இராசையா அழகேசு என்பவரும் அவர் மகன் இளங்கோ என்பவரும் 13.7.84 வெள்ளிக்கிழமை வழமைபோன்று கடற்தொழிலுக்கு மாலை 7 மணியளவில் கடலுக்குச்சென்றனர். சுமார் 2 மைல் தூரம் கடலில் சென்று வலையைவிரித்துவிட்டு படுத்திருந்தபோது நள்ளிரவு12 மணியளவில் கடற்படையினர் இவர்களது படகை நோக்கிச் சுட்டனர். குண்டு ஒன்று இளங்கோவின் நெஞ்சை பிளந்து கொண்டு துளைத்து முதுகுப்பக்கத்தால் சென்றது. உடனடியாக வலையை வெட்டிவிட்டு படகை கரைக்கு கொண்டு வந்து சுட்டவரை மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றபோது மரணமாகிவிட்டதாக வைத்தியர்கள் அறிவித்தனர். மறுநாள் வல்வெட்டித்துறைப் பொலிசில் முறைப்பாடு செய்தனர். பொலிசார் விசாரணையைத் தாமதப்படுத்தி அதற்கு அடுத்தநாள் காங்கேசன்துறையில் இருந்து ஏ.எஸ்.பியும், வல்வெட்டித் துறைப்பொலிசாரும் வந்து விசாரித்தனர். அதன் பின் 15 ம் திகதி சடலம் கையளிக்கப்பட்டது. கடற்படையினர்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்விளைஞர் சுடப்பட்ட அதே தினத்தில் இதே ஊரைச்சேர்ந்த சின்னத்தம்பி யோகேந்திரன் என்பவரது படகைநோக்கிச் சுட்டார்கள், அவர் தெய்வாதீனமாக உயிர்தப்பி கரைக்கு வந்து சேர்ந்தனர். இதேபோன்று 1983 ம் ஆண்டு ஜூலை மாதம் இதே ஊரைச்சேர்ந்த பாபு என்ற கடற்தொழிலாளியும் இவரிடம் தொழில் செய்த மலையகத் தோட்டத்தொழிலாளி ஒருவரும் கடற்படையால் சுட்டுக்கொல்லப்பட்டு இவர்களின் உடல்கள் கடலில் வீசப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தமிழர்களின் கண்ணீர் கதை.

05.08.1984 ஞாயிறு காலையில் வல்வெட்டித்துறையில் பலவீடுகளுக்கு இராணுவம் தீவைத்துக்கொளுத்தியது. இதில் பாதிக்கப்பட்ட ஒரு பெண்மணியின் கதையை கீழே தருகிறோம்.

" என் கணவர் கப்பலில் வேலை செய்கிறார். அவரது கப்பல்கொழும்பு துறைமுகத்தில் வந்ததால் நான் அவரைப் பார்க்கச்சென்று சம்பவம் நடந்த தினம் காலைதான் கொழும்பில் இருந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். வரும்போது கணவர், ஒரு பெரியபெட்டியில் எமக்கு வேண்டிய உடுப்புக்கள் மற்றும் வீட்டுப்பாவனைப் பொருட்கள் என்பவற்றைத் தந்தார். அதனைக் கொண்டு வந்து வீட்டில் வைத்து விட்டு நின்றபோது இராணுவம் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு எமதுஒழுங்கைக்கு ஓடிவருவதைப் பார்த்தேன் . பயத்தினால் பிள்ளைகளைத்தூக்கிக் கொண்டு நான் வீட்டைவிட்டு ஓடினேன். என்னுடன் எனது தங்கையும் அவரது பிள்ளைகளும் ஓடிவந்தார்கள்.
தங்கையின் கணவரும் கப்பலில்தான் வேலை செய்கிறார். நான் ஓடிப்போய் அடுத்தவீட்டு மதில் அருகே நின்று பார்த்த போது இராணுவத்தினர் பலர் எனது வீட்டையும் எனது சகோதரி வீட்டையும் அடித்துநொருக்கி எரிப்பதைப்பார்த்தோம். அதன் பின் அவர்கள் நாங்கள மறைந்து இருநத வீட்டை நோக்கி வந்தார்கள் உடனே நாம் பிள்ளைகளுடன் அடுத்தவீட்டு மதிலால் ஏறிக் குதித்து மற்றோர் வீட்டுக்குப்போனும். மீண்டும் திரும்பி வந்து பார்த்தபோது எங்கள் இருவரது வீடும் வீட்டில் இருந்த ரெலிவிசன், றேடியோ, மின்விசிறி, தளபாடங்கள், சைக்கிள், துணிவகை புடவைகள் யாவும் முற்றாக எரிக்கப்பட்டிருந்தன. எனது சகோதரியின் வீட்டிலும் உடமைகள் யாவற்றையும் எரித்துவிட்டு அங்கு அலுமாரிக்குள் வைக்கப்பட்டிருந்த பெட்டியில் அவர்களது 75000/ பெறுமதியான நகைகள் உள்ள பெட்டியை குசினிக்குள் இருந்து எடுத்த கத்தியால் கொத்திப்பார்த்து நகைகளை இராணுவம்எடுத்துச்சென்றுள்ளது. எங்கள் இருவரது வீட்டிலும் எரிக்கப்படாமல் இருந்தது நகைவைக்கப்பட்டிருந்து உடைக்கப்பட்ட அந்த பெட்டி ஒன்றுதான். எமக்கு எத்தனையோ லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது 2 புதிதாகக் கட்டப்பட்ட வீடுகளையும் இழந்து மாற்றுவதற்குக்கூட உடுப்புக்கள் ஏதும் இல்லாமல் உள்ளோம் கணவர் தந்த பெட்டியும் அதற்குள் இருந்த அத்தனைபொருட்களும் முற்றாக எரிந்து சாம்பலாகி விட்டது. "

பாதிக்கப்பட்ட மக்களில் பொலிகண்டியைச்சேர்ந்த ஏழை மீனவர்கள் பலர். அவர்களில் ஒருவரின் கதையைக் கேளுங்கள்.

நான் தினமும் கடலில் பிடிக்கும் மீனை விற்றுத்தான் என் நான்கு குழந்தைகளையும் காப்பாற்றி வருகிறேன். 4.8.84 சனிக்கிழமையன்று பொலிகண்டியில் கடற்கரையில் வைத்து கடற்படையால் தாக்கப்பட்டேன். அன்று நடந்த சம்பவத்தின் பின பயத்தினால் நான் அயலவருடன் சேர்ந்து வேறு இடத்திற்குப்போய் இருந்தோம். மீண்டும் இரண்டுநாள் கழித்து வந்து பார்த்த போது எனது குடிசை முற்றாக எரிந்து சேதமடைந்து இருந்தது. இராணுவம் குடிசைக்கு தீ வைத்ததாக பலர் சொன்னார்கள். கடற்கரைக்குச் சென்று பார்த்தபோது எனது வள்ளம் உடைக்கப்பட்டு அதற்குள்இருந்த வலைகள் எரிக்கப்பட்டிருந்தது. இன்று இருக்கவீடு இல்லை, உடுக்க உடையில்லை, தொழில்செய்ய வலையோ, வள்ளமோ இல்லை எல்லாவற்றையும் இராணுவம் நாசமாக்கி விட்டது. நான் தற்போது அகதிமுகாமில் பிள்ளைகளுடன் இருக்கிறேன். தினமும் கடலில் கடற்படையினர் சுட்டுக்கொண்டிருப்பதால் இப்போது யாரும் மீன்பிடிக்க -. மீன்பிடிக்கச்செல்ல முடியாது. பல குடும்பங்கள் மிகவும் கஷ்டமான முறையில் வாழுகின்றன இப்பகுதி மீனவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே உள்ளது.

## விடுதலைப் போராளிகளுக்கெல்லாம் ஒரே நோக்கு.

" நான் தோழர்களுடன் சிறையில் இருந்தபோது எனதுதோழர்களுடன் பேசுவதற்கு ஒருமுறை கூட அனுமதிக்கவில்லை. இருந்தபோதிலும் நாங்கள் ஒரேமாதிரியாகத்தான் நடந்துகொண்டோம் இதில் உண்மை என்னவென்றால், மனிதர்கள் தங்களது இதயங்களில் ஒரேமாதிரியான கொள்கைக் கொண்டுள்ளபோது அவர்களை எவற்றாலும் தனிமைப்படுத்திவிட முடியாது. சிறைச்சாலை சுவர்களோ கல்லறைகளோ அவர்களைப் பிரித்துவிட முடியாது. ஒரே நினைவு, ஒரே ஆத்மா, ஒரே கரு ஒரே உணர்வு, ஒரே பெருமை அவர்கள் அனைவரையும் பிணைத்திருக்கும். "- காஸ்ரோ.

இவ்விதழ் உங்கள் கைகளுக்குக் கிடைக்கும்போது இதழ் ஒன்றிற்கு எமக்கு இரண்டு ரூபாவிற்குமேல் செலவாகின்றது. ஆயிரக்கணக்கான பிரதிகளை ஒவ்வொரு தடவையும் நாம் இலவசமாக வழங்கும்போது ஆயிரக்கணக்கில் எமக்குப் பணம் செலவாகின்றது. மிகுந்த சிரமத்தின் மத்தியில்த்தான் இப் பணத்தினை நாம் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கின்றோம். எனவே உங்களுக்குக்கிடைக்கும் இவ் இதழைப் படித்த பின் அருகில் உள்ள நூலகத்திற்கோ அல்லது வேறு மக்களுக்கோ கொடுத்து உதவும் வண்ணம் அன்புடன்வேண்டுகிறோம்.

[illegible] விடுதலை வெளியீட்டுக் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட பதிப்பு

## விடுதலைப் புலிகளின் 11 நாள் நடவடிக்கைகளில்.....

வல்வெட்டித்துறையில் நடைபெற்ற ராணுவத்தின் மீதான வெடிகுண்டு தாக்குதலில் அவர்கள் பிரயாணம் செய்த ஜீப்வண்டி முற்றாக சேதமடைந்ததுடன்; அதில் பிரயாணம் செய்த ஏ.எஸ்.பியும் ராணுவ இணைப்பு அதிகாரியுமான ஜயசுந்தரா என்பவரும் அவருடன் 10 ராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் எம்.பி யோகேஸ்வரனின் வீட்டுக்கு அண்மையில் வைத்து ராணுவ கவச வாகனத்தின் இயந்திரத் துப்பாக்கி இயக்குனர் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். அத்துடன் ஸ்ரான்லி வீதியில் வந்த கவச வாகனமொன்றின் மீது எரிகுண்டு வீசப்பட்டதால் அவ்வாகனத்தின் மேற்பகுதி சேதமுற்றது. அதனை ராணுவம் கட்டி இழுத்துச் சென்றது.

ஒட்டிசுட்டான் பொலீஸ்நிலையத்தின் மீது புலிகளால் நடாத்தப்பட்ட அதிரடித் தாக்குதலால் 2 பொலிசார் கொல்லப்பட்டனர், மற்றவர்கள் தப்பி ஓடிவிட்டனர். அங்கிருந்த ஆயுதங்கள் யாவும் கைப்பற்றப்பட்டது. பொலீஸ் நிலைய மேல் மாடியில் தங்கியிருந்த அதிரடிப்படையினர், இத் தாக்குதல் காரணமாக கீழே வராமல் பயந்து ஒளிந்திருந்தனர். இவ் வேளையில் புலிகள் பொலிஸ் நிலையக் கட்டிடத்திற்கு வெடிகுண்டு வைத்து .. தகர்த்துவிட்டு சென்றனர். மாடியில் இருந்த அதிரடிப்படைக்கு என்ன நடந்ததோ ஆண்டவனுக்குத் தான் தெரியும். இந் நடவடிக்கையினால் புலிகளில் ஒரு சிலர் காயமுற்றனர்.

மன்னார் பூநகரி றோட்டில் நடைபெற்ற புலிகளின் ராணுவத்தின் மீதான வெடிகுண்டுத் தாக்குதலின்போது 2 ஜீப்பில் வந்த 15 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர் 3பேர் படுகாயமுற்றனர். 2ஜீப் வண்டியும் சுக்குநூறாகியது. பின்பு அங்கு வந்த ராணுவத்தினர் காயமுற்ற மூவரையும் டெலிக்கா வான் ஒன்றில் ஏற்றிச் செல்லும்போது அந்த வான் மரமொன்றுடன்மோதியதால் காயமடைந்த மூவரும் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர் காயமுற்றனர். இவ்வாறு விபத்தினால் காயமுற்ற இருவரையும் ஸ்ரீ லங்காவின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் சென்று பார்த்ததையும், அவர்களது பேட்டியையும் ரூபவாகினியில் ஒளிபரப்பினார்கள்.

வல்வெட்டித்துறையில் நடைபெற்ற பொலீஸ் நிலையத்தின் மீதான தாக்குதலில் பொலிஸார் சிலர் காயமுற்றதுடன், பொலிஸ் நிலையத்தின் ஒரு பகுதியும் சேதமுற்றது.

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில், உயிர்ச்சேதம் ஏதும் புலிகளுக்கு ஏற்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரவேல் மொசாட் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள்

சுன்னாகம் பொலிஸ் நிலையில் மொசாட் படையினரின் ஆலோசனையின் பேரில் ஸ்ரீ லங்கா ராணுவம் வெடிகுண்டு வைத்து, கைதான இளைஞர்களை கொல்லவும், கட்டிடத்தை தரைமட்டமாக்கவும் எடுத்த நடவடிக்கையில் வெற்றி பெற்றுள்ளனர். ஆனால் லலித்தினால் பயங்கரவாதிகள் என அழைக்கப்படும், எமது தீவிரவாதிகளே இக் குண்டினை வைத்தார்கள் என வெளிநாட்டு நிருபர்களுக்கும் இலங்கை மக்களுக்கும் லலித் கூறினார். எம் இனத்தின் விடுதலைக்காகப் போராடும் எம் வீர மறவர்கள் எம் இனத்தை அழிக்கவும், எமது சொத்தை நாசமாக்கவும் முனைவார்களா?

கிளிநொச்சி உமையாள்புரத்தில் தேங்காய் ஏற்றிவந்த லொறி ஒன்றிற்கு வெடிகுண்டு வைத்துத் தகர்த்தது ஸ்ரீ லங்கா ராணுவத்தின் செயலாகும். ஆனால் இதன் பழியை தமிழ்த் தீவிரவாதிகளின் மேல் சுமத்தி ஸ்ரீ லங்கா அரசு தமிழ்த் தீவிரவாதிகளையும் தமிழ் மக்களையும் பிரிக்க முனையும் சதிச்செயலில் இதுவும் ஒன்றாகும். எனவே தமிழ் மக்கள் அரசின் பொய்ப் பிரசாரத்தினால் ஏமாறாது விழிப்புடன் செயலாற்ற வேண்டும்.

## அத்துலத் முதலியின் அப்பட்டமான பொய்

பொலிகண்டி வல்வெட்டித்துறைப் பகுதியில் கடற்படையினரால் நடாத்தப்பட்ட பீரங்கித் தாக்குதலை ஸ்ரீ லங்காவின் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் மறுத்துள்ளார். தம்மிடம் இத்தகைய குண்டுகள் ஏதும் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார். அது மட்டுமல்ல ஆகாய மார்க்கமாக எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றைக் காட்டி வல்வெட்டித்துறையில் சேதம் ஏதும் ராணுவத்தால் ஏற்படவில்லை எனப் பொய்ப் பிரசாரம் செய்கிறார். ஆனால் கடலிலிருந்து கடற்படையினர் 2 யுத்தக் கப்பல் மூலமாக தொடர்ச்சியாக இரு நாட்கள் தீர்க்கப்பட்ட சுமார் 150 க்கு மேற்பட்ட குண்டுகளால் ஏற்பட்ட சேதத்தை இன்னமும் நேரடியாக எவரும் பார்க்கலாம். அது மட்டுமல்ல வெடித்துச் சிதறிய குண்டின் அடிப்பாகங்கள் இன்னமும் பொதுமக்கள் வசம் உள்ளன. ராணுவத்தால் தீர்க்கப்பட்ட துப்பாக்கி ரவைகள் இன்னமும் பனை தென்னை மரங்களிலும் கட்டிடங்களிலும் ஏற்படுத்திய அடையாளங்கள் மூலமும். இவற்றின் மீது பதிந்துள்ள ரவைகள் மூலமும் எவரும், என்ன நடந்துள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம். இதே போன்றுதான் எரித்து சிதைக்கப்பட்ட கடைகள், வீடுகள், வாகனங்கள், என்பன இன்னமும் சாம்பல் மேடாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன.

தமிழ் மக்களாகிய நாம் ஸ்ரீ லங்காவின் அமைச்சர் லலித்துக்கு சவால் விடுகிறோம். "நீர் ஓர் நேர்மையுள்ள அமைச்சரானால், புத்த தர்மத்தை பின்பற்றுபவராக இருந்தால் ஒரு சர்வதேச விசாரணைக் குழுவை நியமித்தால் நாம் அந்த விசாரணைக் குழு முன் தோன்றி நீர் கூறும் அத்தனை பொய்களையும் முறியடித்து உண்மை நிலையினை உலகுக்கு நிரூபிக்க . . என்றும் தயாராக உள்ளோம் என்பதை உமக்கு அறியத் தருகிறோம்.

---

தமிழினவிடுதலை வெளியீட்டுக் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org